# Gospel Truth
# காஸ்பல் ட்ருத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 12 – FOR PRIVATE CIRCULATION ONLY – இதழ் - 12


## கிறிஸ்துவின் ஒப்பற்ற அன்பு

(மத்தேயு 27, மாற்கு 15, லூக் 23, யோவான் 19 ஆகியவற்றிலிருந்து எடுத்துக் கூறப்பட்டுள்ள கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளை உள்ளடக்கியது).

இயேசுகிறிஸ்து முதலாவதாக காட்டிக் கொடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு, பின்பு சிலுவையில் அறையப்படும் படி ஒப்புக்கொடுக்கப்பட்டார். ரோம போர்ச்சேவகர்கள் அவருடைய வஸ்திரங்களை எடுத்துக்கொண்டார்கள். அவரை மிகவும் கடினமாய் துன்புறுத்தினார்கள்.

வழக்கமாக ரோம போர்ச்சேவகர்கள் கைதுசெய்யப்பட்டவர்களை மரணத்தருவாய்க்கு கொண்டு செல்லும் வகையில் கசையடிகளை

அடித்து துன்பப்படுத் துவார்கள். ஆட்டின் கூர்மையான எலும்பு அல்லது சிறிய இரும்பாலான பந்துகள் பொருத்தப்பட்ட சாட்டைகளையும் கொண்டு அடிப்பார்கள். இயேசு கிறிஸ்துவையும் கூட அவர்கள் அவ்வாறாகவே துன்புறுத்தினார்கள்.

அவருடைய தோல் கிழிக்கப்பட்டு, அதனால் சரீரத்திலிருந்து இரத்தம் வழிந்தோடியது. தொடர்ந்து இயேசுவை அவர்கள் அடித்துக் கொண்டேயிருந்ததால் அவருடைய முதுகிலுள்ள தசைகளும், ஆழமான திசுக்களும் கூட உடைந்து அவர் பலவீனமடைந்தார். ஒரு போர்ச்சேவகன் வார்த்தையினால் அவரை காயப்படுத்தி அவர் முதுகிலே பாரமான சிலுவையை கட்டி சுமந்து வரும்படி செய்தான்.



அவர் சிரசிலே முட்கிரீடத்தை சூட்டினார்கள். முட்கள் என்பது பாவத்தை குறிப்பது. நம் ராஜாதி ராஜா இயேசுகிறிஸ்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்த தேவஆட்டுக்குட்டி. அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக பணிந்து யூதருக்கு ராஜா என கூறி ஏளனம் செய்தார்கள். இத்தனை பாடுகளையும், வேதனையையும் தாங்கிக்கொண்ட நம் அருள்நாதர் இயேசுவின் மேல் காரித் துப்பினார்கள். அவரைப் பார்த்து சிரித்தார்கள். அவர்களுடைய வழக்கத்தின் படி, சிலுவையின் குறுக்கே வைக்கப்படுகிற மரத்தை

இயேசுகிறிஸ்துவின் முதுகிலே சுமத்தினார்கள். சுமார் 75 முதல் 125 பவுண்ட் எடையுள்ள அந்த சிலுவை மரத்தை அவர் தோளின் மீது வைத்து சுமந்து வந்தார். கொல்கொதா மலை வரையில் அவர் சிலுவையை சுமந்து கொண்டே சென்றார். சீமோன் என்கிற மனுஷன் சிலுவையை சுமப்பதில் இயேசுவுக்கு உதவினார்.

காலை ஒன்பது மணி அளவில் (3ஆம் மணி வேளை) இயேசு கீழே விழுந்தார்.அவருடைய உள்ளங்கையிலும், குதிங்காலிலும் கூர்மையான ஆணிகள் அடிக்கப்பட்டது. “நசரேயனாகிய இயேசு யூதருக்கு ராஜா” என்ற வாக்கியம் எழுதப்பட்டு சிலுவையிலே பதிக்கப்பட்டது. சிலுவை கீழிருந்து மேலாக உயர்த்தப்பட்டு, அவருடைய கைகளிலும், கால்களிலும் அடிக்கப்பட்ட ஆணிகள் சிலுவை மரத்தோடு சேர்த்து அடிக்கப்பட்டது.


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | கர்த்தருடைய இராப்போஜனம் | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? |
|---|---|---|---|---|
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 - 6 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**

2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**

மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**

அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**

யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**

லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**

மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**

மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**

1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**

2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4 : 23, 24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16 : 15

சிலுவையில் அறையப்படுதல் என்பது மிகவும் துயரமான வேதனைகள் மிகுந்த, மோசமான தலையாய தண்டனையாகும். அடிமைகள், அந்நியர்கள், துரோகிகள், பெரிய குற்றவாளிகள் இது போன்றோருக்கே சிலுவைதண்டனை கொடுக்கப்பட்டது. இதனால் மிகுந்த பாடு, வேதனை, வலிகளை ஒருவருக்கு தரமுடியும். இயேசுவோடுகூட இரண்டு கள்ளர்களும் கூட சிலுவையில் அறையப்பட்டார்கள்.

பரிதபிக்கப்பட்டவராய் இத்தனை வேதனைகளையும் சகித்துக்கொண்டு சிலுவையில் தொங்கியவண்ணம் அங்கு கூடியிருந்த ஜனங்களை நோக்கி “பிதாவே இவர்களுக்கு மன்னியும்.தாங்கள் செய்வது இன்னது என்று அறியாதிருக்கிறார்கள்” என்று வேண்டிக்கொண்டார். தூதர்களைக் கொண்டு அவர் இப்பாடுகளிலிருந்து விடுபட்டுகொள்ளும் வல்லமை அவருக்கு இருந்தபோதிலும் கூட தாம் அவ்வாறு செய்யாமல் இப்பாவமனுக்குலத்தின் மீட்புக்காக தம்மையே கிருபாதார பலியாக, அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக ஒப்புக்கொடுத்தார். அவர் நம்மேல் கொண்ட அன்பை வெளிப்படுத்தினார்.

சிலுவையில் அறையப்பட்டதால் அவரால் சுவாசிக்க இயலவில்லை. அவர் வாரினால் அடிக்கப்பட்டு வாதிக்கப்பட்டதால் சரீரம் முழுவதும் தொய்ந்துபோனது. சரீரத்தை போதுமான அளவுக்கு உயர்த்தினால்தான் சுவாசிக்க முடியும்.சரீரம் கிழிக்கப்பட்டதால் நரம்புகளில் மிகுந்த பாடுநிறைந்த வேதனையோடும், காயங்களோடும் அவர் தொங்கினார்.

இருளான வேளை, சாயங்காலம் 3 மணி (9 ஆம் மணி வேளை) இயேசு மகா சத்தமாய் கூப்பிட்டு, “பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்” என்று சொல்லி தன் ஜீவனை விட்டார். இயேசு மரித்த உடனே தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாக கிழிந்தது. பூமி மிகவும் அதிர்ந்தது. பிதாவின் குமாரனாம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமன்னிப்பாகிய மீட்பை பெற்றுள்ளோம்.

அவர் எவ்வளவாய் பாடுபட்டு, வேதனைகளின் மத்தியிலே சிலுவையிலே மரித்து தம் இன்னுயிரை ஈந்து இம்மண்ணுலகின் பாவத்தை சுமந்து தீர்த்தார் என்று எண்ணி பாருங்கள். ஒரு போர்ச்சேவகன் கிறிஸ்து மரித்ததை அறிந்து அவர் விலாவிலே ஈட்டியால் குத்தினான். அதனால் அவருடைய சரீரத்திலிருந்து இரத்தமும் தண்ணீரும் வெளியேறியது. சத்துருவாகிய பிசாசானவன் மேசியா மரித்ததைக் கண்டு தான் ஜெயித்ததாக எண்ணினான். நம் அருள்நாதர் இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து மூன்றாம் நாள் உயிரோடு எழும்பினார். அவர் பிசாசை வென்று விட்டார். அவர் இன்றும் ஜீவிக்கிறார்.

## காஸ்பல் ட்ரூத்

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.*

*கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும். அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது. பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது. சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.*

## இணையதள சேவை

*எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** என்ற *இணையதள முகவரியை பார்க்கவும். மேலும் உங்களது* **E.mail** *மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம். உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.*

## தொடர்புக்கு

*தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.*

**ஆசிரியர். டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி
பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# ஆசிரியரின் தலையங்கம்

அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்து போவேன். நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்....யாத் 12 : 13 .

அவருடைய இரத்தத்திற்காக அவருக்கு நன்றி! சங்காரதூதன் அந்த இரத்தத்தை இஸ்ரவேலர்களின் வீட்டு வாசலின் நிலைக்கால்களில் காணும்போது, வாசற்படியை விலகிக் கடந்துபோவார். அதேபோலதான் தேவனுடைய நியாயத்தீர்ப்புநாளிலே அவருக்கு முன்பாக நிற்கிற நம்மிலே தம் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தை அவர் காணும்போது நித்திய பரலோக வாழ்வுக்காக நம்மை மீட்டெடுப்பார்.

ஆழமான பாவப்பிடியினின்றும் நம்மை விடுதலையாக்கும் வல்லமை கொண்டது அவருடைய பரிசுத்த இரத்தம். ஒரு மனுஷன் மாம்சீக இச்சைகளினாலே இழுக்கப்பட்டு மிகுந்த பாவியாய் வாழ்ந்து வருவானேயாகில், அத்தகைய மனுஷன் பரிசுத்த வாழ்வு வாழ்வது என்பது சாத்தியமல்ல. படுபயங்கரமான அப்பாவியை பரிசுத்தமாக்க வல்லது அவருடைய இரத்தம் என்பதை மறந்துவிடாதீர்கள். இயேசுகிறிஸ்து இரத்தம் சிந்தி 2000 ஆண்டுகள் ஆகியும் கூட, அவருடைய இரத்தம் அந்த வல்லமையை இழந்து போகவில்லை.

இந்த இதழில் கர்த்தருடைய இராப்போஜனம் குறித்து பார்ப்போம். பழைய ஏற்பாட்டில், ஒரு மனிதனுடைய பாவத்தை போக்குவதற்காக மிருகங்கள் பலியிடப்பட்டன. அல்லாமலும் காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யமாட்டாதே (எபி 10 : 4). இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக அவரையே கிருபாதார பலியாக ஒப்புக்கொடுத்தார். இயேசுகிறிஸ்து ஒப்பற்ற விலைமதிப்பில்லா இத்தியாகத்தை எண்ணி, திருவிருந்து ஆராதனையில் நான் அழுததுண்டு. அவருடைய அன்பு பெரியது. நம்முடைய மீட்புக்காக அவர் விலைமதிப்பற்ற தம் உயிரை ஈந்தார்.

நம்முடைய ஜனங்கள் கிறிஸ்மஸ் பண்டிகையை, கிறிஸ்து பிறந்த தினமாக அனுசரித்து மிகவும் உற்சாகமாய் காணப்படுகிறார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து தம் பிறந்தநாளை நினைவுகூரும்படி சொல்லவில்லை. ஆனால் தம் மரணத்தை நினைவுகூரும்படி இராப்போஜனத்தை கடைபிடிக்குமாறு தம் ஜனங்களுக்கு அறிவுறுத்திச் சென்றிருக்கிறார். வேதத்திலே குறிப்பிட்டு எந்த கால நேர அளவும் சொல்லப்படவில்லையெனினும் நம் பிரார்த்தனைகூடுகைகளில் ஜனங்கள் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த ஞாயிறு அன்று திருவிருந்து கடைபிடிப்பது வழக்கமாய் கொண்டிருக்கின்றனர்.

கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைபிடிப்பதில் ஒழுங்குகளும், அடையாளங்களும் முக்கியம். பல ஜனங்கள் ஒரே பாத்திரத்தில் பங்குகொள்வதை விரும்புவதில்லை. மாறாக தனித்தனியான பாத்திரத்தையே விரும்புகிறார்கள். திருவிருந்தின்போது ஒரே பாத்திரத்தில் அநேகர் பங்குகொள்வதால் சுகவீனமுண்டாகும் என்று நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். சுகவீனங்களோடு வந்து பங்குகொள்கிறவர்களோடு நானும் கலந்து கொண்டுள்ளேன். ஆகவே அதனால் யாரும் சுகவீனப்படுவதில்லை.

வேதாகமத்தில் கர்த்தருடைய இராப்போஜனத்தின்போது திராட்சபழரசம் உபயோகப்படுத்தப்பட்டது. அடையாளமாய் அது சிறந்ததாய் கருதப்பட்டாலும், பல இடங்களில் அது கிடைப்பதில்லை. ஆகவே வேறு திராட்ச பழச்சாறுகள் உபயோகிக்கப்படுகிறது. ஒரு இடத்தில் அங்கு கிடைக்கும் ஒருவித திராட்ச பழச்சாறோடு கலந்து உபயோகித்தோம். கர்த்தர் அதை கனம்பண்ணுகிறார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

இயேசுகிறிஸ்துவின் பாடுகளில் நாம் திருவிருந்தின் வழியாக பங்குகொள்வதில் பிரமிக்கத்தக்க ஆசீர்வாதங்கள் உண்டு. கர்த்தாவே உம்முடைய அன்பின் தியாகத்திலே ஐக்கியமாயிருப்போம்.



# வேதாகம வழிகாட்டி

## பொருள் : கர்த்தருடைய இராப்போஜனம் எனும் கட்டளை

**வேத வாசிப்பு:** ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள் - 1 கொரி 11 : 26.

**விளக்கம்:** மனுக்குலத்தின் மீட்புக்கென்று சிந்தப்பட்ட இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம், அவருடைய சரீரத்திலே அவர் அனுபவித்த வேதனை, பாடு, மரணம் இவற்றை நினைவுகூரும்படியாக கொடுக்கப்பட்ட வேதகட்டளைதான் இராப்போஜனம்.

**வாசிக்க:** மத்தேயு 26 : 17-30; 1 கொரி 11 : 20-34, லூக் 22 : 7-22; மாற் 14 : 12-26 .

**I.கடந்து போக கட்டளையிடப்பட்டது**

A. யாத் 12 : 12-15 எகிப்து தேசம் எங்கும் கடந்துபோதல்.

B. மத் 26 : 17-20 புளிப்பில்லா அப்ப பண்டிகை.

C. லூக் 22 : 7-16 ஆயத்தம் செய்தல்.

**II.கிறிஸ்துவின் கட்டளை**

A. மத் 26 : 26-29 இயேசு தம் சீஷர்களுக்கு இராப்போஜனம் கொடுத்தார்.

B. 1 கொரி 11 : 23 நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்.

**III.இராப்போஜனத்தின் நோக்கம்**

A. புதிய ஏற்பாடு நினைவுகூருதல்.

B. 1 கொரி 11 : 24, 25 என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்.

C. 1கொரி 11 : 26 அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள்.

**IV.அப்பத்தின் அடையாளம்**

A. மத் 26 : 26 இது என்னுடைய சரீரமாயிருக்கிறது.

B. 1 கொரி 11 : 24 உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது.

C. 1 கொரி 10 : 17 சபை கிறிஸ்துவின் சரீரம்.

D. 1 கொரி 5 : 6-8 புளிப்பில்லா அப்பம்.

**V.திராட்சரசத்தின் அடையாளம்**

A. மத் 26 : 28-29 இயேசுகிறிஸ்து சிந்திய இரத்தம்.

B. 1கொரி 10 : 16 கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியம்.

C. 1 கொரி 12 : 13 ஒரே ஆவிக்குள் ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.

**VI.இராப்போஜனம் அனுசரிப்பின் ஒழுங்கு**

A. மாற்கு 14 : 22 இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார்.

B. மாற்கு 14 : 23 பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார்.

C. 1 கொரி 11 : 23 -26 ஐ பார்க்க.

**VII.இராப்போஜனத்தின் இறுதி**

A. மத் 26 : 30 அவர்கள் ஸ்தோத்திர பாட்டைப் பாடினார்கள்.

B. மாற்கு 14 : 26 அவர்கள் ஸ்தோத்திரபாட்டைப் பாடின பின்பு ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

**VIII. கொரிந்து சபை தவறான திருவிருந்து அனுசரிப்பு**

1 கொரி 11 : 20-22, 34 நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது, அவனவன் தன்தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான். இப்படி செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே.

**IX.விசுவாசிகளுக்கு கட்டளை**

A. 1 கொரி 11 : 27-28 எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து.

B. 1 கொரி 11 : 29-32.

**X.சபை பின்பற்றவேண்டியது**

A. மத் 28 : 20 நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி.

B. 1 கொரி 11 : 2 கட்டளைகளைக் கைக்கொண்டு.

C. 1 கொரி 11 : 25 இதைச் செய்யுங்கள்.

**முடிவு :**

எந்த மனுஷனும்தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன் - 1 கொரி 11 : 28.



## புளிப்பில்லா அப்பம்

### செய்முறை

புளிப்பில்லா அப்பம் செய்வது மிகவும் எளிது. தேவையான பொருட்கள் மாவு மற்றும் தண்ணீர்.

**தேவையான பொருட்கள் :**

**1 1/2 கப் அரைத்த மாவு.**

**1 கப் தண்ணீர்**

ஒரு பாத்திரத்தில் மாவை எடுத்துக் கொள்ளவும். தண்ணீர் சேர்த்து பிசைந்து கொள்ளவும். தட்டையாக செய்யும் பக்குவத்திற்கு எண்ணெய் சேர்த்து கொள்ளலாம்.

ஒரு கடாயில் எண்ணெய் தடவி,மிதமான சூட்டில் 15 நிமிடங்கள் திருப்பி திருப்பி போட்டு சுட்டு எடுக்கவும்.

**அப்பம் தயார்**



இதை வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது.
1கொரிந்தியர் 11 : 24

# கர்த்தருடைய இராப்போஜனம் எனும் கட்டளை
## ஒருநோக்கு வேதாகம செய்தி

**பழைய ஏற்பாடு கடந்து வந்த காலம்**
ஏறத்தாழ 3500 ஆண்டுகளுக்கு முன், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களை மோசே வழிநடத்தி வந்தார். கர்த்தர் தம் ஜனங்களுக்கு கட்டளையிட்டது யாதெனில், ஒரு பழுதற்ற ஆட்டுக்குட்டியை பலியிட்டு அதன் இரத்தத்தை வாசல் நிலையில் தெளிக்கக்கடவீர்கள் என்றார். அன்று இரவு சங்கார தூதன் எகிப்து முழுவதிலுமுள்ள ஒவ்வொரு வீட்டின் தலைச்சன் ஆண்பிள்ளைகளை சங்கரித்தான். ஆனால் ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்ட வீடுகளிலுள்ள ஆண்மக்கள் மரணத்தினின்று காக்கப்பட்டனர் (யாத் 12:12-15).

**இயேசு இராப்போஜனம் எனும் கட்டளையை நியமித்தார்**
சுமார் 1500 ஆண்டுகளுக்குப்பின், இயேசு தம் சீஷர்களோடு உட்கார்ந்து அவர் பாடுபடுவதற்கு முன்னே பஸ்காவைப் புசிக்க ஆசையாயிருந்தார் (லூக் 22:7-16).




தாம் மனுக்குலத்தின் பாவத்திற்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாய் இன்னும் சில மணி நேரங்களில் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று அவர் அறிந்திருந்தார். இயேசு புளிப்பில்லா அப்பத்தையும், திராட்சரசத்தையும் எடுத்து அங்கே முதல் இராப் போஜனமாகிய திருவிருந்தை ஏற்படுத்தினார் (மத் 26 : 26 -29). இந்த கட்டளை கிறிஸ்துவால் உண்டாக்கப்பட்டபின்பு பவுல் அப்போஸ்தலனால் மறுபடியும் கடைபிடிக்கப்பட்டது. நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன் (1கொரி 11:23).

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தாலே மனுக்குலத்தின் பாவக்கறைகளை நீக்கி, மீட்படைய செய்யமுடியும். விலையேறப்பெற்ற இந்த இரட்சிப்பை ஆட்டுக்குட்டியானவராம் நம் இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் மூலம் நாம் பெற்றுக்கொண்டோம். இயேசு தம் சீஷர்களிடம் என்னை நினைவுகூரும்படி இதைச்செய்யுங்கள் என்கிறார் (1கொரி 11:24).

நம் இரட்சகரின் பாடுகளையும் வேதனையையும் நாம் ஒருபோதும் மறந்து போகக்கூடாது. அவரை நினைவுகூரும்பொருட்டு இராப்போஜனம் கடைபிடிக்கப்பட வேண்டும். நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள் (1கொரி 11:26).

**அப்பம் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தைக் குறிக்கிறது**
கர்த்தருடைய இராப்போஜனம் என்பது புதிய ஏற்பாட்டின் சில கட்டளைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கட்டளையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரை நினைவு கூரும்படியாக கடைபிடிக்கப்பட வேண்டிய ஒன்று. இயேசு புளிப்பில்லா அப்பத்தை எடுத்து அதைப்பிட்டு, நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது (1கொரி 11:24).

கிறிஸ்து இயேசு சிலுவையில் அடிக்கப்பட்டு. அவருடைய சரீரம் நொறுங்குண்டதினிமித்தம் நாம் விலையேறப்பெற்ற இரட்சிப்பாகிய மீட்பை அடைந்துள்ளோம். ஆகவே அப்பம் என்பது அவருடைய சரீரத்தின் அடையாளம். அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம் (1கொரி 10:17 ).

பல தானியங்கள் ஒன்றாக சேர்க்கப்பட்டு அரைத்து மாவாக்கப்பட்டு எப்படி இந்த புளிப்பில்லா அப்பம் உருவாக்கப்படுகிறதோ, அதேபோலதான் பல்வேறு சூழ்நிலைகளிலிருந்தும், பிரிவுகளிலிருந்தும் வரும் அனைத்து ஜனங்களையும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒன்றிணைத்து நாம் மீட்கப்பட்டதை காட்டும் உன்னத அடையாளம்.

**திராட்சரசம் இயேசுவின் திருஇரத்தத்தையும், அவருடைய சிலுவைப் பாடுகளையும் குறிக்கிறது**

திராட்சரசம் என்பது திராட்சபழங்களின் பழச்சாறு. இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது ( மத் 26 : 28 ). திராட்சபழங்கள் அழுத்தப்பட்டு, சாறு பிழிந்தெடுக்கப்படும். அதேபோல தான் நம் அருள்நாதர் இயேசுகிறிஸ்துவும் நமக்காக காயப்பட்டு, நொறுக்கப்பட்டு, இரத்தஞ்சிந்தி அதினிமித்தம் இப்பாவமனுக்குலத்திற்கு மீட்பை பெற்றுத் தந்தார். ஒவ்வொரு தேவபிள்ளையும் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் வழியாக அவரோடு ஐக்கியப்பட்டிருக்கிறோம் (1கொரி 10 : 16).

**இராப்போஜன ஒழுங்கு**

பலவழிகளில் இதனை சபையில் ஒழுங்குபடுத்தலாம். ஆனாலும் ஐக்கியத்தின் அடையாளத்தை உணர்ந்து கைக்கொள்ளப்பட வேண்டும். இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து : நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார் ( மாற்கு 14 : 22 ). வேதத்தின் அடிப்படையில் இராப்போஜனம் இவ்வாறாக கடைபிடிக்கப்பட வேண்டும். பல சபைகளில் ஒருசில மாற்றங்களுக் குட்பட்ட கைக்கொள்ளுதலால் இதன் அடையாளம் அழிந்துபோகிறது. பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதை அவர்களுக்கு கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள் ( மாற்கு 14 : 23 ). ஒரே பாத்திரத்திலே அனைவரும் பங்குகொண்டனர்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய பாடுகளிலும் அவரோடு பங்குகொள்ளக்கடவோம். இதுதான் உண்மையான ஐக்கியத்தின் அடையாளம். முதல் இராப்போஜனத்திற்கு பிறகு சீஷர்கள் ஸ்தோத்திரப்பாட்டை பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள் (மாற்கு 14 : 26). இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைப் போலவே நாமும் புறப்பட்டுச் செல்கையில் உன்னத ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கடந்துசெல்வோம். வேதத்தின் மகத்துவங்கள் ஒருபோதும் மாற்றம் பெற கூடாது.

**கட்டளையை தவறாக உபயோகித்தல்**

கொரிந்து சபையினர் கர்த்தருடைய இராப் போஜனத்தை முறையாக பின்பற்றவில்லை. ஆகவே அங்கே பவுல் அப்போஸ்தலர் போதிக்கிறார் ( 1கொரி 11 : 20-22, 34 ). கொரிந்து சபையினர் ஓரிடத்தில் சபை கூடிவரும்போது அவனவன் தன்தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான். இப்படி செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் அல்லவே. பவுல் அவர்களை புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா என எச்சரிக்கிறார். தேவனுடைய செயல்களில் ஜாக்கிரதையாயிருங்கள்.

**இராப்போஜனம் அனைத்து விசுவாசிகளுக்கும் ஏற்புடையது**

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைகள் பங்குபெறும் ஐக்கியம் (1கொரி 11 : 27-32). பவுல் இவ்வாறாக கூறுகிறார்.எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து,அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.



தேவ சபை அவர்மேல் விசுவாசமுள்ளவர்களாய் ,அவரை நினைவுகூரும் படி கர்த்தருடைய இராப்போஜனத்தை அவருடைய வருகைபரியந்தமும் கடைபிடிக்க வேண்டும்

ஆகவே எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். மாறாக யாவரும் தங்களை தாங்களே முதலாவது சுய பரிசோதனை செய்துகொள்ளக்கடவோம். அதாவது தன் வாழ்க்கை,நடத்தை,தொழில்...இன்னும் பல. இதினிமித்தம் அநேகர் பலவீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்.அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம் (1 கொரி 11 : 29, 32). ஆகையால் கர்த்தருடைய இராப்போஜனம் எனும் கட்டளையை மிகவும் ஒழுங்காய் கடைபிடிக்க வேண்டும்.

**தலைமுறைக்கும் கடைபிடிக்கப்படவேண்டியது**

இராப்போஜனம் என்பது அப்போஸ்தல ஊழியத்தால் அனைத்து தலைமுறைக்கும் கடைபிடிக்கும்படியாய் வலியுறுத்தப்பட்டுள்ளது. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார் (மத் 28: 20). நான் உங்களுக்கு ஒப்புவித்ததை நீங்கள் கைக்கொள்ளுங்கள் என்பதே பவுலின் உபதேசம் (1 கொரி 11 : 2). இதைச் செய்யுங்கள் ( 1கொரி 11 : 25). ஆகவே தேவசபையானது அவருக்கு கீழ்ப்படிந்து அவர் வருகைமட்டும் அவருடைய கட்டளைகளை காத்து நடக்க கடவது.

# கேள்விக்கு என்ன பதில்?

**எப்போதெல்லாம் இராப்போஜனம் கடைபிடிக்கப்பட வேண்டும்?**
சபையானது இந்த கட்டளையை பின்பற்றுமாறு தெளிவாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. சில ஜனங்கள் அதில் பங்குகொள்ள பிரியப்படுவதில்லை.

சபையில் திருவிருந்து எப்போதெல்லாம் நடைபெற வேண்டும் என்று இயேசு குறிப்பிட்டு கூறவில்லை. அவர் கூறுகிறார். நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம்... (1கொரி 11:26). தேவனோடு உள்ள ஐக்கியத்தின் வழியாக ஒவ்வொரு மனிதனுக்கும் இராப்போஜனத்தை கடைபிடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. எப்போதெல்லாம் என்பது நாம் கூடுகிற ஐக்கியத்தின்போது கடைபிடிக்கலாம். இதில் குறிப்பிடத் தக்கது என்னவெனில் இயேசு கிறிஸ்து தாம் இந்த உலகத்தை விட்டு கடந்து செல்லும்போது இராப்போஜனத்தை சீஷர்களுக்கு தந்ததால் அந்த நாளில் மாத்திரமே நினைவுகூருவது என்று எடுத்துக் கொள்ளக் கூடாது.

சில ஜனங்கள் வாரத்திற்கு ஒருமுறை திருவிருந்தில் பங்குகொள்வர். அது தவறல்ல. ஆனால் அது சடங்காச்சாரமாக அனுசரிக்கப்படக்கூடாது. சில ஜனங்கள் தொடர்ந்து திருவிருந்து எடுப்பதை பாவமன்னிப்பின் அடையாளமாக கருதுகிறார்கள். இதில் பங்குகொள்வதால் இரட்சிப்பை அடைய இயலாது. பரிசுத்த வாழ்வை வாழ வழிவகுக்கும் இரட்சிப்பை தேவகிருபையினால் நம்முடைய விசுவாசத்தைக் கொண்டே பெற்றுக் கொள்ள இயலும்.

**சிறுபிள்ளைகள் திருவிருந்தில் பங்குபெறலாமா?**
வேதாகமத்தில் திருவிருந்தில் பங்குபெற வயது குறிப்பிட்டு கொடுக்கப்பட வில்லையெனினும் வயது ஒரு தேவையே, எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து (1கொரி 11 : 28). இரட்சிக்கப்பட்டவர்களே திருவிருந்தில் பங்கு கொள்ள வேண்டியது அவசியம். பிறந்த குழந்தையோ அல்லது 2 வயதுள்ள ஒரு குழந்தையோ தன்னைத்தான் சோதித்தறிய அறிந்திருக்காது.

குழந்தை ஞானஸ்நானம் எப்படி வேதத்திற்கு மாறானது அதுபோலவேதான் குழந்தைகள் திருவிருந்து எடுப்பதும் திருவிருந்தில் பங்குகொள்வதில் குழந்தைகளை பக்குவப்படுத்தி வளர்ப்பது பெற்றோர்களின் கடமை. பெற்றோர்கள் தேவபக்தியில் குழந்தைகளை வளரச்செய்தாலும் கூட , திருவிருந்து என்பது மறுபடி பிறக்கும் ஒரு அனுபவமாகும். ஆகவே அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளும்படி பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவுறுத்த வேண்டும். ஒரு குழந்தை திருவிருந்து எடுக்க வேண்டுமெனில் இரட்சிப்பின் அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும்.

**பொருள் மாற்றியமைத்தல் என்பது என்ன?**
அப்பத்தையும், திராட்சரசத்தையும் குறித்ததான மாறுபட்ட கருத்தை கூறுவது தவறான உபதேசமாகும். அவர்களுடைய வழிபாட்டின்போது கொடுக்கப்படுகிற அப்பமும், திராட்சரசமும் இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் ஒப்பிடப்பட்டாலும் உண்மையான அதன் பொருளை உணர்வ தில்லை. இது என்னுடைய சரீரமா யிருக்கிறது. இது என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மத் 26: 26, 28) என்று இயேசு கூறிய வசனங்களிலிருந்து எடுக்கப்பட்டது.

இயேசு கிறிஸ்து இதனை மாம்சீகப்பிரகாரமாக கூறவில்லை ஏனெனில் அவர் தன் சொந்த சரீரத்தையும், இரத்தத்தையும் உடையவராகவே காணப்பட்டார். ஆகவே அதை அவர் உருவகப்படுத்தி உவமையாக கூறினார். 1கொரி 11:26 ல் இயேசு கிறிஸ்து நீங்கள் இதை பானம்பண்ணும்போதெல்லாம் என்று கூறியிருக்கிறார். அவர் தம் சீஷர்களிடம் என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார் (லூக் 22:19) ஆகவே அவர் மாம்சீகபிரகாரமான திருவிருந்தின்அப்பத்தைக் குறித்து அவ்வாறு கூறவில்லை என அறிய முடிகிறது. அப்பமும், திராட்சரசமும் இயேசு கிறிஸ்துவின் சரீரத்திற்கும், இரத்தத்திற்குமான அடையாளங்கள்.



**Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide**
**Indian Constitution Act 25th & 19(1) Section**

## TAMIL EDITION



உங்களுக்குத் தெரியுமா?

*அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்–மாற் 14 : 26.*

*யூதர்கள் கடந்துசெல்லும்போது பாடுவதோ அல்லது கர்த்தர் புகழை சொல்லி கோஷமிடுவதோ வழக்கம்.*

*சங்கீதம் 113–118 துதி ஸ்தோத்திர நன்றி கூறுதலாகும்.*
*சங்கீதம் 113– 114 போஜனத்திற்கு முன்பதாக பாடுவது .சங்கீதம் 115–118 முடிவிலே பாடுவது.*

*ஆனால் இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் ஏன் ஸ்தோத்திரப்பாட்டை பாடினபின்பு, புறப்பட்டுப்போனார்கள் எனும் சிந்தனை எழுகிறதல்லவா?*

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## அவருடைய பாடுகளின் ஐக்கியம்

**எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்...நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும்... நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும் அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்கு தகுதியாகும்படிக்கும் -பிலி 3 : 8-10.**

அப்போஸ்தலனாகிய பவுல் எல்லாவற்றையும் கிறிஸ்து இயேசுவுக்காக நஷ்டமென்று எண்ணினபடியினால் இயேசுகிறிஸ்துவின் வல்லமையையும், வழிநடத்துதலையும் அவருடைய வாழ்வில் அதிகமாய் ருசித்திருக்கிறார் . உள்நோக்கத்துடன் பவுல் அவருடைய விசுவாசத்தின் உறுதியினிமித்தம் தலைதுண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டார். அவர் எழுதியவைகளைக் கொண்டு நிச்சயமாய் கூறமுடியும். பவுல் கிறிஸ்துவுக்காக அநேக பாடுகளை தன் வாழ்வில் அனுபவித்துள்ளார். கர்த்தராகிய இயேசு பரலோக மேன்மையை துறந்து மனுக்குலத்தின் பாவத்தை நீக்கும்பொருட்டு, தன்னையே தியாக பலியாக தந்தார். அவர் கொடுத்த நித்திய ஜீவ வாழ்வுக்கும், இரட்சிப்புக்கும் ஈடாக நாம் என்னத்தை அவருக்காக திருப்பி செலுத்த போகிறோம். அவருடைய பாடுகளின் பாத்திரத்திலே நாமும் பங்குகொண்டு அதற்குள்ள மேன்மையின் மகிமையை அடைவோம்.



ஒரிஜன் எனும் கிறிஸ்தவ அறிஞர் கூறுகிறார், அப்போஸ்தலனாகிய பேதுரு, இயேசுவைப் போலவே சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று சொல்லப்படுகையில் தனக்கு அதற்கு தகுதியில்லை. ஆகவே தன்னை தலைகீழாக சிலுவையில் அறையுங்கள் என கூறினதால் அவ்வாறாகவே அவர் சிலுவையிலறையப்பட்டார்.

நம்முடைய பாடுகள் ஒருபோதும் அவருடைய பாடுகளுக்கு ஈடாகாது.அவரோடு ஒப்பிட்டு பார்க்க முடியாதது.இயேசுகிறிஸ்து காட்டிக்கொடுக்கப்பட்டார், வாரினால் அடிக்கப்பட்டார்,ஒடுக்கப்பட்டார்,அவதூறான வார்த்தைகளால் காயப்பட்டார், நொறுக்கப்பட்டார். அவரை துப்பினார்கள். பரிகாசம் செய்தார்கள்.இவ்விதமாக எண்ணற்ற துயருற்று சிலுவையிலறையப்பட்டார்.

தேவபிள்ளைகளாகிய நாம், சோதனை, பாடுகள் வழியாக பிரவேசிக்கும்போது சோர்ந்து போகக்கூடாது. கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.
-1பேதுரு 4 : 13.

**தொடர்புக்கு:-**

ஆசிரியர்,
காஸ்பல் ட்ரூத்
தேவசபை வெளியீடு
2/227 – கோலார்பட்டி
பொள்ளாச்சி வட்டம்
தென் இந்தியா - 642 107

The Editor,
Gospel Truth,
Church of God Publication
2/227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.Vedha, Church of God, 2/227 Kolarpatti, Pollachi -Taluk,South India - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316